## ஒதுக்கீட்டுத் தலைப்பு – 128 – பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு - 2012

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 949,865,039 ஆனதுடன் ஆண்டின் இறுதியில் இதில் ரூபா 834,707,471 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய சேமிப்பு ரூபா 115,157,568 தொகையாகியிருந்ததுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டில் 12.12 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்புக்கள் | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழுபவை | 522,447,000 | 526,490,039 | 19,000,194 | 3.60 |
| மூலதனம் | 300,475,000 | 423,375,000 | 96,157,374 | 22.71 |
| கூட்டுத்தொகை | 822,922,000 | 949,865,039 | 115,157,568 | |

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

(i) 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 522,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ii) 20 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 05 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலான அளவைக் கொண்டிருந்தது.

**(இ) அரசாங்க செலவின முகாமைத்துவம்**

2011 திசெம்பர் 30 ஆம் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீண்டெழும் மற்றும் மூலதன ஏற்பாடுகளில் முறையே 2 சதவீதமும் 9 சதவீதமுமான ஏற்பாடு சேமிக்கப்பட வேண்டும். இதற்காக அமைச்சின் மூலதனச் செலவின விடயங்கள் ரூபா 405,000 தொகை சேமிக்கப்பட வேண்டிய போதிலும் இதில் ரூபா 350,000 மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

12801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானது | இழிவு எல்லை | உள்ளபடியானது | உச்ச எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 7,500,000 | 5,035,378 | 2,500,000 | 5,171,587 | 25,000,000 | 12,758,317 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒரு உத்தியோகத்தருக்கு கடன் தொகை வழங்கப்படுகையில் தாபனவிதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7.3, 3.7.4, 3.17.3 மற்றும் 3.17.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை மற்றும் அக் கடனை வழங்குவது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் அல்லது உத்தியோகத்தர்களின் கவனக்குறைவு மற்றும் தாமதம் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 39,538 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 139,808 தொகையான கடன் மீதியை அறவிடுவது தொடர்பாக கிடைக்கப்பெற்ற அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகப் பரிந்துரையைச் செயற்படுத்தாமையால் அத் தொகையும் வட்டித்தொகையும் 2012 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களி பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

அமைச்சால் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்து முகாமைத்துவம்

### விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

குருநாகல் குரு பொகுன தளபாடக் கைத்தொழிலுக்கு இணையான தயாரிப்புக் கிராமத்திற்காக ரூபா 1,406,060 தொகை செலவில் 2010 ஆம் ஆண்டின் போது தயாரிப்பு பூர்த்தியான பொது வசதிகள் நிலையக் கட்டிடம் 02 ஆண்டுகளுக்கு மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 1.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 756 மற்றும் 507(1) | சகல சொத்துக்களும் வருடாந்த பொருள் மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சின் 02 பிரிவுகளில் பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | அமைச்சிடமிருந்த 30 வாகனங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

## 1.7 நட்டங்களும் இழப்புகளும்

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) கலநிஹ வெள்ளை மிளகு உற்பத்திக் கிராமத்தின் நிர்மாணிப்புகள் தாமதமடைந்த காரணத்தால் அறவிடப்பட வேண்டிய ரூபா 68,856 தொகையான தாமதக்கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கலநிஹ வெள்ளை மிளகு உற்பத்திக் கிராமத்தின் பொது வசதிகள் நிலையத்திற்கு இலங்கை தொழிநுட்ப அபிவிருத்திச் சபையால் 2008 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த வெள்ளை மிளகு உற்பத்திக்கான 5 இயந்திரங்கள் அவ்வியந்திரங்கள் செயற்படுத்தப்படுவதற்கு தேவையான மின்சுழற்சி வழங்கப்படாத காரணத்தால் கணக்காய்வுத் திகதி வரை செயற்படுத்தப்படுவதற்கு இயலாதிருந்தது.

## 1.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

நாரம்மல பிரதேச செயலகப் பிரிவில் மாரவிட்ட தும்பு சார்ந்த உற்பத்திக் கிரயத்தில் பொது வசதிகள் நிலைய நிர்மாணிப்பு, மூலதன உபகரணக் கொள்வனவு, நுழைவு வீதி நிர்மாணிப்பு மற்றும் மின்சாரம் பெற்றுக்கொள்வதற்காக 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 12,774,295 தொகை செலவிடப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமாகிய 2013 பெப்ரவரி 20 வரையிலும் 3 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் இந் நிலையம் திறக்கப்பட்டு மக்கள் உரித்திற்கு ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.9 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 கொள்வனவு வழிகாட்டற் கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் பொருளையோ அல்லது சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான பத்திரிகை விளம்பரம் ஒன்றை பிரசுரிக்கையில்

இதற்காக போதிய காலத்தை வழங்க வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது பாதுகாப்புச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் இத் தேவைப்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சட்ட ரீதியாக காணி கையேற்கப்படாது ரூபா 925,000 செலவிடப்பட்டு கலநிஹ வெள்ளை மிளகு உற்பத்திக் கிராமத்தின் பொது வசதிகள் நிலையம் தனியார் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,406,060 செலவில் கொடவெஹெர குருபொகுண பொது வசதிகள் நிலையம், நிறுவனம் கல்வி அமைச்சின் காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 18 | 11 | 07 | - |
| மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| இரண்டாம் நிலை | 396 | 58 | 338 | - |
| ஆரம்ப நிலை | 31 | 28 | 03 | - |
| ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 05 | 06 | - | 01 |
| மொத்தம் | 453 | 104 | 350 | 01 |

மீளாய்வாண்டின் இறுதி வரை 350 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.